**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.96** **நாள்: 12.05.2025**

**பெருநகர சென்னை மாநகராட்சி பேருந்து நிறுத்தங்களில் மின்விளக்குகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது**

பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள பேருந்து வழித்தட சாலைகளில் உள்ள பேருந்து நிறுத்தங்களில் ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு தீவிரத் தூய்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டது. இதனைத் தொடர்ந்து பேருந்து நிறுத்துங்கள் முழுவதுமாக சீரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. மேலும் சுழற்சி முறையில் நீர் தெளித்து சுத்தமாக பராமரிக்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பிற்காக பெருநகர சென்னை மாநகராட்சியால் மின் விளக்கு இல்லாத இடங்களில் மின் விளக்குகள் அமைத்தல், தேவைப்படும் இடங்களில் கூடுதலாக மின் விளக்குகள் அமைத்தல், கண்காணிப்பு கேமராக்கள் பொருத்துதல் உள்ளிட்ட பல்வேறு பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் பெண்கள் குழந்தைகள் உள்ளிட்ட அனைத்து பயணியர்களின் பாதுகாப்பினை கருத்தில் கொண்டு பெருநகர சென்னை மாநகராட்சியில் 1 முதல் 15 வகையிலான அனைத்து மண்டலங்களிலும் உள்ள பேருந்து வழிதடங்களில் அமைந்துள்ள ஒவ்வொரு பேருந்து நிறுத்துங்களிலும் தலா இரண்டு எல்.இ.டி. மின் குழல் விளக்குகள் பொருத்தும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதன், முதற்கட்டமாக பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள பேருந்து வழித்தடங்களில் அமைந்துள்ள தெரு விளக்குகள் அருகில் உள்ள 685 பேருந்து நிறுத்தங்களில், சாலையோர மின் விளக்கு இணைப்புகளிலிருந்து பேருந்து நிறுத்தங்களில் தலா இரண்டு எல்.இ.டி. குழல் விளக்குகள் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது இதுவரை 70 பேருந்து நிறுத்தங்களில் மின்விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளது. இதரப் பகுதிகளில் தொடர்ந்து இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது .

இதனைத் தொடர்ந்து இரண்டாவது கட்டமாக சாலையோர விளக்குகள் அமையாத 210 பேருந்து நிறுத்தங்களில் புதிதாக மின் மீட்டருடன் மின் இணைப்புப் பெற்று மின்விளக்குகள் பொருத்தும் பணி மேற்கொள்ளப்பட உள்ளது. இதன் காரணமாக பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள பேருந்து நிறுத்தங்கள் மின்விளக்கு வசதி உள்ளிட்ட முழுமையான வசதிகள் மற்றும் பாதுகாப்பு நிறைந்த பேருந்து நிறுத்தமாக புதுப்பொலிவினைப் பெற்று திகழ்ந்திடும்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**